## விவசாயின் வெற்றிக்கதை

எஸ்.நஞ்சுண்டன்,

எண் / 294, உடையார் ரெட்டி,

கொடநாடு அஞ்சல், ஊட்டி, நீலகிரி.

அளவு: 2 ஏக்கர்

அலைபேசி: 9443095713.



---

என் பெயர் நஞ்சுண்டன், நீலகிரியில் உள்ள உடையார்ரெட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் என்னுடைய இரண்டு ஏக்கர் நிலத்தில் கேரட் மற்றும் பீன்ஸ் போன்ற காய்கறிகளை பயிரிட்டு வருகிறேன். சிறிது வேலையாட்கள் உதவியுடன் நான் விவசாயம் செய்து வருகிறேன்.

அண்மைக் காலம் வரை என்னுடைய விவசாய உற்பத்திப் பொருட்களை நீலகிரியில் உள்ள சில தரகர்களிடம் மட்டுமே விற்பனை செய்து வந்தேன். மலையின் கீழ் உள்ள மேட்டுப்பாளையத்திற்கு சென்றது கிடையாது. என்னுடைய விவசாயப் பொருட்களுக்கு குறைவான விலை கிடைப்பதை அறிந்தவுடன் நான் நேரடியாக மேட்டுப்பாளையம் சந்தைக்கு வந்து விற்பனை செய்தேன். சில நாட்களுக்குப் பிறகு, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சந்தை ஆய்வாளர் திரு.பிரசாத்தை சந்தித்தேன். அவர் எனக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் உருவாக்கி உள்ள www/indg.in/India/Market Information என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்தி தினசரி சந்தை நிலவரங்களைப் பற்றியும் விளக்கினார். இன்னும் எங்கள் ஊரில் இணையதள வசதிகள் இல்லாததால் நான் மொபைல் செய்திகள் மூலம் உற்பத்திப் பொருட்களின் விலையை தினசரி சந்தை நிலவரங்களின் மூலம் அறிந்து கொள்கிறேன்.

நான் ஒரு சமயம் 38-40 கிலோ உள்ள 10 சணல் பைகளில் கேரட் பைகளை பலத்த மழை பெய்து கொண்டிருந்த காரணத்தால் உள்ளூர் சந்தையிலேயே விற்க முடிவு செய்தேன். நான் அவற்றை விற்க தயாராகிக் கொண்டிருந்த போது எனக்கு

மொபைல் மூலம் மேட்டுப்பாளையம் சந்தையில் முதல் நிலை கேரட் விலை ரூபாய். 22 (முதல் தரம்) என்ற தகவல் வந்தது. நான் உள்ளூர் சந்தையில் விலை கேட்ட போது கிலோ ரூபாய். 17 (முதல் தரம்) என்று குறைந்த விலையைக் கூறினார்கள். உடனே நான் என்னுடைய எண்ணத்தை மாற்றிக் கொண்டு, மேட்டுப்பாளையம் சென்று அங்கு விற்பனை செய்தேன். இது எனக்கு ஒரு அதிர்ஷ்டமாக இருந்தது. இந்த வாய்ப்பு எனக்கு தினசரி சந்தை நிலவரம் வழங்கும் செய்திகளால் மட்டுமே பெற முடிந்தது.

நான் இப்பொழுது சிரித்த முகத்துடன் இருப்பதாகக் கருதுகிறேன். இது எனக்கு தினசரி சந்தை நிலவரங்கள் வழங்கும் செய்திகளால் மட்டுமே முடிந்தது. எனது மனமார்ந்த நன்றியை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகதுக்கும் அதன் தினசரி சந்தை நிலவரப் பணிக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நல்ல வாய்ப்பை வழங்கியதற்கு நன்றி.